**<u>சார்பு நீதிமன்றம். துறையூர்</u>**

**முன்னிலை .திரு. எம்.ஜெய்சங்கர். எம்.ஏ.,பி.எல்.,**

**சார்பு நீதிபதி.**

**துறையூர்.**

**2024ம் ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 10ம் நாள் திங்கள்கிழமை**

**<u>இடைநிலை மனு எண்.5/2023 இன் அசல் வழக்கு எண்.164/2022</u>**

பொன்னுசாமி ....மனுதாரர்/22 வது பிரதிவாதி

/எதிராக/

1. அழகம்மாள்
2. தியாகராஜன்
3. கண்ணதாசன்
4. ராஜேந்திரன் .... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு இன்று 06.06.2024 என்முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T. கார்த்திகேயன் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S. முத்துகிருஷ்ணன் அவர்களும் ஆஜராகி இருதரப்பு வாதங்கள் கேட்டும், மனுக்கள் ஆவணங்களை பரிசீலனை செய்தும் நீதிமன்றம் வழங்கும்...

**<u>உத்தரவு</u>**

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7-ன் கீழ் ஒருதலைப்பட்ச உத்தரவை நீக்கரவு செய்யக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர்களின் மனுசுருக்கம்:-</u>**

2.மனுதாரர் அசல் வழக்கில் 22 வது பிரதிவாதி. வாதிகள் அவர்களுக்குரிய பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டி வாய்தா போடப்பட்டிருந்தது. மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் உரிய காலத்தில் மனுதாரர் தரப்பு எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை. அதனால் 21.08.2023 அன்று மனுதாரரை அழைத்து வருகையில்லாததால் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச

உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அசல் வழக்கில் மனுதாரருக்கு நல்ல கட்சி உள்ளது. மனுதாரர் தரப்பு எதிர்வழக்குரையையும் இன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உரிய காலத்தில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததை மன்னித்து இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

<u>**எதிர்மனுதாரர்களின் பதிலுரை சுருக்கம்:-**</u>

3.மனுதாரர் மனுவில் சொல்லியிருக்கக்கூடிய அனைத்தும் பொய்யும், தவறுமாகும். இந்த எதிர்மனு உரையில் ஒப்புக்கொள்ளப்பட்ட அம்சங்களைத் தவிர மற்ற அனைத்தையும் எதிர்மனுதாரர் மறுத்தளிக்கிறார். மனுவில் சொல்லியிருக்கக்கூடிய அனைத்து சங்கதிகளையும் மனுதாரரே முற்றிலும் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். மனுவில் கோரியுள்ள பரிகாரங்களை பெறுவதற்கு மனுதாரருக்கு சட்டப்படி எவ்வித உரிமையும் இல்லை. மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் பொய்யும் தவறுமாகும். இந்த மனுதாரர் அசல் வழக்கில் 09/12/2022-ம் தேதி வக்காலத்து நாமா தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னிட்டு 31/01/2023, 28/02/2023, 28/03/2023, 24/04/2023, 25/07/2023, 08/08/2023 மற்றும் 21/08/2023 என ஏழு முறை வாய்தாவும் அதாவது 255 நாட்கள் கொடுக்கப்பட்டுள்ளது. 90 நாட்களுக்குள் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டும் என்பது சட்ட நடைமுறையாகும். அதையும் தாண்டி நாட்கள் கடத்திவிட்டு தற்போது ஒருதலைபட்ச உத்தரவையும் தாண்டி 50 நாட்கள் கழித்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

4.மேலும் உடம்பிற்கு என்னவென்று தெளிவாகவும் கூறவில்லை. எந்த காலத்தில் இருந்து எந்த காலம் வரை உடல் நலம் சரியில்லாமல் இருந்தது என்றும், அதற்காக எந்த மருத்துவமனையில் மருத்துவம் பார்க்கப்பட்டது என்றும் எந்தவிதமான தெளிவான காரணங்களை கூறவில்லை. அதனால் இந்த மனுவை தள்ளுபடி செய்யவேண்டிய மனுவாகும். தேவைப்படும் பட்சத்தில் கூடுதல் எதிர்மனுவுரை தாக்கல் செய்யும் உரிமையை எதிர்மனுதாரர்கள் தக்கவைத்து

கொண்டுள்ளார். மனுவில் கோரியுள்ள பரிகாரங்களை பெறுவதற்கு மனுதாரருக்க சட்டப்படி எவ்வித உரிமையும் இல்லை. மனுவில் சொல்லியிருக்ககூடிய அனைத்தும் சங்கதிகளையும் மனுதாரரே முற்றிலுமாக நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்.

**5.**இருதரப்பு மனுக்கள், ஆவணங்களை பரிசீலனை செய்ததில், இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

**தீர்வு..**

6.இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனுக்கள் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், மனுதாரர் உரிய காலத்தில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் ஒருதலைப்படுத்தப்பட்டார் என்றும் தற்போது இம்மனுவுடன் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே, மனுவை அனுமதிக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த மனுவுடன் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. வழக்கு 2022 வழக்காகும். இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரர் தரப்பு நியாயத்தை நீதிமன்றத்தில் எடுத்து சொல்ல வாய்ப்பில்லாமல் போய்விடும். எனவே நீதியின் நலன் கருதி மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு வழங்கி மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மனு அனுமதிக்கப்படுகிறது.

இறுதியாக மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இன்று 2024-ம் ஆண்டு ஜூன் மாதம் 10-ம் நாள் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு மொழியப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்)/- M. ஜெய்சங்கர்
சார்பு நீதிபதி,
துறையூர்.

**<u>மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்.</u>** இல்லை.

(ஒம்)/- M. ஜெய்சங்கர்
சார்பு நீதிபதி,
துறையூர்.